கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு.E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
திருமங்கலம்.

2026–ம் ஆண்டு மார்ச் 18ம் நாள், புதன்கிழமை
அசல் வழக்கு எண்.19/2018
CNR No.TNMD130000462018
* * * *

1) பரமசிவம்
2) செல்லப்பா என்ற செல்லப்பன்
3) பாலன்
4) தினகரன்
5) ராமர்
6) ரதி என்ற அழகுரதி
7) மூவேந்திரன்
8) விருமாண்டி
9) பாண்டியம்மாள்
10) பாலகிருஷ்ணன்
11) அழகு சுந்தர்
12) சுரேஷ்
13) சுரேந்திரன்
14) அன்னபாக்கியம்
15) அழகுபாண்டி
16) பால்பாண்டி
17) தங்கபாண்டி ... வாதிகள்

/எதிர்/

1) கார்த்திக்

2) வட்டாட்சியர் அவர்கள்,
திருமங்கலம்.
3) தமிழ்நாடு அரசிற்காக
அதன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 16.03.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.தங்கசுவாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்த நிலையில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

வாதிகளுக்கு மட்டுமே தாவாச் சொத்து கூட்டு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்ய கோரியும், அதன் முக்கியத்துவமாக 1ம் பிரதிவாதியோ அவர்களது ஆட்களோ வாதியின் அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை செலுத்த கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:-**

1.1) தாவா சொத்தானது இந்த நிர் வாதிகளின் பாட்டனார் பெருமாள் தேவருக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவாச் சொத்து ஆதியில் பெருமாள்கோவில்பட்டியைச் சேர்ந்த கழுவத்தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்றும், மேற்படி கழுவத்தேவரின் மகன்களான பெருமாள் தேவர் மற்றும் மாயத்தேவர் ஆகியோர்கள் தாவாச் சொத்து உட்பட இன்னும் பிற பல சொத்துக்களை மேற்படி கழுவத்தேவர் காலமான பின்பு தங்களுக்குள் வாய்க்கரலாக பாகம் பிரித்து அனுபவம் செய்து வந்துள்ளனர் என்றும், தாவா மொத்த விஸ்தீரணமான 2 ஏக்கர் சொத்து இந்த நிர் வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவர் 1 ஏக்கர் 25 செண்டு விஸ்தீரணத்தை தன் கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்துள்ளார் என்றும், தன் உடன்பிறந்த சகோதரரான மாயத்தேவர் என்பவரிடமிருந்து 75 செண்டு விஸ்தீரணத்தை 30.05.1913ம் தேதியன்று சுத்தக்கிரையம் பெற்றுள்ளார் என்றும்,

1.2) மேற்படி வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவர் தனக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 25 செண்டு மற்றும் கிரையம் பாத்தியப்பட்ட 75 செண்டினையும் சேர்த்து 2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட

நிலத்தினை தன் காலம் முழுவதும் எந்தவிதமான வில்லங்கமும் படுத்தாமல் அனுபவம் செய்து வந்தார் என்றும், இந்த நிர் வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவருக்கு ஒரே மகனான மாயத்தேவர் என்பவர் மட்டுமே வாரிசுதாரர் என்றும், தாவா சொத்தை மாயத்தேவருக்கு பின்னிட்டு ராமத்தேவர், லட்சுமணத்தேவர், கழுவத்தேவர், ராசுத்தேவர் ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்து மேற்படி நான்கு நபர்களும் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகிவிட்ட நிலையில் இந்த நிர் வாதிகள் அனைவரும் பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவம் செய்து வருகின்றனர் என்றும்,

1.3) இந்த நிர் 1ம் பிரதிவாதிக்கும், தாவாச் சொத்திற்கும் அனுபவத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றும், எனினும் 1ம் பிரதிவாதி தன்னையும் மேற்படி பெருமாள்தேவரின் வாரிசு என்று கிராமத்தில் பிரஸ்தாபித்து கடந்த 06.11.2017ம் தேதியில் இடையூறு செய்தார் என்றும், மேலும் 1ம் பிரதிவாதி தாவாச் சொத்தில் தனக்கு உரிமை இருப்பதாக பொய்யாக பிரஸ்தாபித்து மீண்டும் 08.12.2017ம் தேதி வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு இடையூறு செய்தார் என்றும், மேற்படி 1ம் பிரதிவாதியின் சட்டபுறம்பான செயலை வாதிகள் தடுத்து நிறுத்திவிட்டனர் என்றும், தாவாச் சொத்து வாதிகளின் தகப்பனாருக்கு பூர்வீகம் மற்றும் கிரையம் மூலம் பாத்தியப்பட்டு இருப்பதால், இந்த நிர் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு

எதிராக விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகள் தாவா வழக்கை தாக்கல் செய்ததாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதிகளுக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3) <u>**இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்**</u>:–

1. வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?
2. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?
3. இதர பரிகாரங்கள் என்ன?

<u>**4) சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**</u> **: –**

4.1) வாதிகள் தரப்பில், வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு, வா.சா.1 மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4.2) பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரச்சனைகளுக்கான தீர்வு</u>:–**

**<u>5) பிரச்சனை எண்கள் 1, 2–ற்கான தீர்வு</u>:–**

1. வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்ககூடியதா?
2. வாதிகள் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

5.1) வாதிகள் கோரியபடி விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா என்று பரிசீலனை செய்கையில், தாவா சொத்து வாதிகளுக்கு கூட்டுப்பாத்தியப்பட்டது என்றும், தாவாச் சொத்தினைப் பொறுத்து வாதிகளின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றும், விளம்புகை பரிகாரமும், நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்க உத்தரவிடக்கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.2) வழக்கு சொத்தானது ஆதியில் வாதிகளின் பாட்டனார் பெருமாள் தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவர் தனக்கு பாத்தியப்பட்ட 2

ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட நிலத்தினை தன் காலம் முழுவதும் எந்தவிதமான வில்லங்கமும் படுத்தாமல் அனுபவம் செய்து வந்தார் என்றும், இந்த நிர் வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவருக்கு ஒரே மகனான மாயத்தேவர் என்பவர் மட்டுமே வாரிசுதாரர் என்றும், தாவா சொத்தை மாயத்தேவருக்கு பின்னிட்டு ராமத்தேவர், லட்சுமணத்தேவர், கழுவத்தேவர், ராசுத்தேவர் ஆகியோர்கள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும் வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். வா.சா.1ன் சாட்சியத்தை ஒத்துரைத்து வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலானவர்கள் சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால், வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலானவர்கள் சாட்சியத்தை தவிர வழக்கு சொத்து வாதிகளுக்கு சட்டப்படியாக பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும்விதமாக வா.சா.ஆ.1ஐ தவிர வேறு சட்டப்படியான ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்து நிரூபணம் செய்யப்படவில்லை.

5.3 தாவா சொத்து வாதிகளின் பாட்டனார் பெருமாள் தேவருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய வாதிகளின் பாட்டனார் பெருமாள்தேவர் பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது தாவா சொத்திற்கான புல எண்ணில் இல்லை. பைமாஸ் 186 எண்ணில்

மட்டுமே உள்ளது. மேற்படி வழக்கு சொத்தின் சர்வே எண்.55/1 என்பதும், வா.சா.ஆ.1ல் காணப்பட்டுள்ள பைமாஸ் எண்.186 என்பதும் ஒன்றே என்பது குறித்து நிரூபணம் செய்யும் விதமாக வாதிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும், தாவா சொத்து 2 ஏக்கர் என்ற நிலையில், வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது 75 செண்ட்டுக்கு மட்டுமே உள்ளது. மேற்படி வா.சா.ஆ.1ம் வழக்கு சொத்திற்குரியது என்று வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும், தாவா சொத்து கூட்டுப்பாத்தியம் என்று கூறும் நிலையில், அதனை நிரூபணம் செய்யும்விதமாக வாதிகள் தரப்பில் எந்தவித சட்டப்படியான ஆவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5.4) மேலும், வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி தாவா சொத்தில் 75 செண்ட் வாதிகளின் பாட்டனார் பெருமாள் தேவர் என்பவருக்கு பாத்தியப்பட்டுள்ளதாக வாதிகள் தரப்பில் எடுத்துரைத்த நிலையில், தாவா சொத்தான 2 ஏக்கரில் மீதமுள்ள 1 ஏக்கர் 25 செண்ட் நிலம் வாதிகளின் பாட்டனார் பெருமாள் தேவர் என்பவருக்கோ, பெருமாள் தேவரின் வாரிசுகளுக்கோ பாத்தியப்பட்டது என்பதை நிரூபணம் செய்யும்விதமாக சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி வாதிகள்

தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

5.5) மேலும், தாவாசொத்து வாதிகளுக்கு கூட்டுபாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யாத நிலையிலும், வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6. பிரச்சனை எண். 3–ற்கான தீர்வு:–**

3. இதர பரிகாரங்கள் என்ன?

இவ்வழக்கில் வழக்குச்சொத்தை பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், பிரச்சனை எண்கள். 1, 2க்கு வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், இவ்வழக்கு சந்தர்ப்ப சூழ்நிலைகளின்படி வாதிகளுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்த பிரச்சனைக்கு விடை காணப்படுகிறது.

**முடிவாக,** இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 18.03.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 16:20:15 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.),
திருமங்கலம்.

**இணைப்பு:–**

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1. – பரமசிவம்
வா.சா.2. – செல்லப்பன்
வா.சா.3. – கருப்பாயி
வா.சா.4. – பாண்டி

**2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

வா.சா.ஆ.1. பெருமாள் பாட்டனார் பெயரிலான கிரையப்பத்திரம் நீதிமன்ற சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.2. பத்திர அலுவலகத்தில் கொடுத்த ஆட்சேபணை மனு கணினி நகல்.

வா.சா.ஆ.3. தாவா சொத்துக்கான கிஸ்தி ரசீது.(வரிசை 5)

வா.சா.ஆ.4. கழுவத்தேவர் இறப்பு சான்றிதழ்.

வா.சா.ஆ.5. லட்சுமணத்தேவா இறப்பு சான்றிதழ்.

வா.சா.ஆ.6. தவமணி இறப்பு சான்றிதழ்.

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : –** இல்லை

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–** இல்லை

**5. நீதிமன்ற சாட்சிகள் :** இல்லை.

**6. நீதிமன்ற சான்றாவணங்கள் :** இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.18 16:20:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.),
திருமங்கலம்.

அசல் வழக்கு எண்.19/2018
செவ்வை – தீர்ப்புரை
நாள்: 18.03.2026